# குருசேத்திரம்

කුරුසේත්තිරම්

Guruseththiram

களம்:மூன்று கணை: இருபத்துமூன்று மார்ச் -2023



சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்தே...

# குருசேத்திரம்

சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...

**பிரதம ஆசிரியர்**
திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்

**இணை ஆசிரியர்**
திரு. ஞா.இரத்தினசிங்கம்
திரு. ம.நிரேஸ்குமார்
திரு. ஞா.கயூரன்

**தொழிநுட்பமும் பசுமை எண்ணக்கருவும்**
திரு. நா.அம்பிகைபாகன்
திரு. த.குவேந்திரன்

**தொழிநுட்பமும் ஆக்க வடிவமைப்பும்**
திரு. வே.நந்தகுமார்
திரு. பொ.விஜயகுமாரன்

**நூலறிதலும் மேம்பாடும்**
கலாநிதி. நா.சந்திரிக்கா
திருமதி. ப.ஜெயச்சந்திரன்

**கதைக்களம்**
செல்வி. வி.கந்தசாமி
திரு. ம.நிரேஸ்குமார்

**காண்பியப் பொறுப்பு**
திரு. கே.ஆர்.கமலநாதன்

**வெளியீடு**
குருசேத்திரம் வெளியீடு
யாழ்ப்பாணம்.

**தொடர்புகளுக்கு**
guruseththiram@gmail.com

## உள்ளே

1 | ஆசிரியரின் உள்ளத்திலிருந்து
2 | காட்சியும் கருத்தும்
3 | Blended Learning கலவைக்கற்றல் 1
5 | Life
6 | இலங்கை சுற்றாடல் முகாமையில் திண்மக் கழிவுகளின் வருகையும் இருப்பும்
10 | சமூகத்தின் பார்வையில் விசேட கல்வி ஆசிரியர்களின் நிலை
12 | "இன்பா"வின் சிந்தனைத் தொடர்கள் -- 14
13 | போதை இல்லா உலகம்
14 | உயிர்காக்கும் தமிழ்
15 | புத்தக பிரியரா நீங்கள்?
16 | ஒரு மாணவன் எப்படி இருக்க வேண்டும்
18 | மாற்றம் ஒன்றே மாறாதது
19 | Friendship
20 | எனது மகள் உயிரோடு இருப்பதை விட மரணிப்பதே நல்லது
22 | பேசும் படங்கள்...!

குருசேத்திரத்தில் இடம் பெறுகின்ற கட்டுரைகள், ஆக்கங்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் மற்றும் தகவல்களுக்கு அதனை எழுதியவர்களே பொறுப்புக்கூறக் கடப்பாடுடையவர்கள்!

குருசேத்திரம்
சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...

# ஆசிரியர் உள்ளத்திலிருந்து...




குருசேத்திரம் கணை 23 சஞ்சிகைக்கு ஆசிரியர் தலையங்கம் எழுதுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய ஆசிரிய தலையங்கத்தில் ஒவ்வொரு வரினதும் உள்ளார்ந்த அனுபவங்களை வெளிக்கொணர் வதற்கான சந்தர்ப்பங்களை உரிய வகையில் உரிய வர்களிடம் பகிர்ந்துகொள்ள வேண்டுமென்பதை பதிவி டுகின்றேன். **நல்ல சிந்தனைகளில் இருந்தே நல்லமுடிவுகள் பிறக்கின்ற அதேவேளை நல்ல முடிவு களின் கற்பனாசக்தியே செயலாற்றலை ஊக்குவிக்கின்றது. குறிப்பாக உரிய நேரத்தில் ஒருவரிடம் இருந்து வெளிப்படுத்தப்படாத ஆற்றல்கள் மழுங்கடிக்கப்படுவதற் கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திவிடும்.**

அந்தவகையில் எம்மீதான சமூகப்பொறுப்புக்களின் மீதான எமது சிறு சிறு கரிசனைகள் அதன் மீதான செயலாற்றலை ஊக்குவிக்கின்றன. எதிர்காலத்தில் எமது கல்விப்புலத்தில் தலைவர்களாகச் செயலாற்றப் போகும் மாணவ ஆசிரியர்களாகிய உங்களின் ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை நீங்களே ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அந்த ஆற்றல்களே எதிர்காலத்தில் வரலாறாக மாற்றப்படும் அதேவேளை மற்றவர்களால் போற்றப்படவும் செய்யும்.

வளங்களிலே மிக முக்கியமானது மனித வளம். அதிலும் இளையவர்களின் சக்தியென்பது நாட்டினுடைய முதுகெலும்பாகக் கணிக்கப்படுகின்றது. ஆகவே எந்த வொரு விடயத்திலும் அர்த்தமில்லாத வாதப்பிரதிவாத ங்களில் சிக்காமல் தனித்துவ ஆற்றல்களை வெளிப்படுத்தி எதிர்காலத்தில் சிறந்த முன்னுதாரணமான கல்விப்புல அதிகாரிகளாகத் திகழ வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திக்கும் வரை...

**சு.பரமானந்தம்**
**பிரதம ஆசிரியர்**

# காட்சியும் கருத்தும்

திரு. சு. பரமானந்தம்






"குருசேத்திரம்" மாதாந்த சஞ்சிகைக்கான ஆக்கங்கள் மாணவ ஆசிரியர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. தங்களின் ஆக்கங்கள் ஒரு பக்கத்திற்குள் உள்ளடங்குவது விரும்பத்தக்கது. **குருசேத்திரம் உங்களின் களம்...**

அனைவரும் ஆக்கங்களை எமது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

✉ guruseththiram@gmail.com

# Blended Learning கலவைக்கற்றல் 1


**திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்**
பீடாதிபதி
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

கலவைக் கற்றல் என்ற சொல் பொதுவாக மாணவர்களுக்கு கற்பிக்கும் போது நிகழ் நிலையில் (Online) மற்றும் நேர் நிலையில் (Physical) கற்றல் அனுபவங்களை வழங்கும் நடைமுறையாகும்.

ஒரு கலவைக்-கற்றல் பாடத்தில், எடுத்துக்காட்டாக, மாணவர்கள் பாரம்பரிய வகுப்பறை அமைப்பில் ஆசிரியரால் கற்பிக்கப்படும் வகுப்பில் கலந்து கொள்ளலாம், அதே நேரத்தில் வகுப்பறைக்கு வெளியே பாடத்தின் விடயங்களை நிகழ் நிலையில் சுயாதீனமாக கற்கலாம் இந்த விடயத்தில், வகுப்பில் உள்ள நேரம் நிகழ் நிலை கற்றல் அனுபவங்களால் மாற்றப்படலாம் அல்லது கூடுதலாக வழங்கப்படலாம், மேலும் மாணவர்கள் வகுப்பில் செய்யும் அதே தலைப்புகளைப் பற்றி நிகழ் நிலையில் கற்றுக்கொள்வார்கள். அதாவது, நிகழ் நிலை மற்றும் நேர் நிலையில் கற்றல் அனுபவங்கள் ஒருவருக்கொருவர் பூர்த்தி செய்யும் முறை கலவை கற்றல் அல்லது கலவை முறை கற்றல் என்றும் அழைக்கப்படும்.

கலவைக்-கற்றல் அனுபவங்கள் பாடசாலைக்கு பாடசாலை, அப் பாடசாலையில் உள்ள வளங்களின் கிடைப்பளவில் தங்கியுள்ள அதே வேளை பல்வேறு காரணிகளின் தேவைப்பாட்டிலும ஆசிரியரின் ஆற்றலிலும், வடிவமைப்பு மற்றும் செயற்பாடு பரவலாக வேறுபடலாம். உதாரணமாக, கலப்புக் கற்றல் ஒரு சில ஆசிரியர்களால் பாடசாலையில் வழங்கப்படலாம் அல்லது பாடசாலைக் கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ள முறையிலும் கற்றல்-வளங்களின் கிடைப்பளவின் அடிப்படையிலும் பாட சாலைக்கு வெளியிலும் இடம்பெறலாம்.


நிகழ்நிலைக் கற்றல் என்பது வகுப்பறை அடிப்படையிலான பாடத்தின் ஒரு சிறிய அங்கமாக இருக்கலாம் அல்லது காணொளி பதிவு செய்யப்பட்ட விரிவுரைகள், நேரடி காணொளி மற்றும் உரை அரங்கம் மற்றும் எண்மிய முறையில் செயல்படுத்தப்பட்ட கற்றல் நடவடிக்கைகள் ஆசிரியருடன் மாணவர்களின் இடைவினை அறிவுறுத்தல் தொடர்புகளாக இருக்கலாம்.



சில சமயங்களில், மாணவர்கள் வீட்டிலோ அல்லது வேறு இடங்களிலோ நிகழ்நிலைப் பாடங்கள், திட்டங்கள் மற்றும் பணிகளில் சுயாதீனமாக வேலை செய்யலாம், அவர்களின் கற்றல் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்யவும், அவர்களின் வேலையைப் பற்றி விவாதிக்கவும், கேள்விகளைக் கேட்கவும் அல்லது கடினமான கருத்துக்களுடன் உதவி பெறவும் மட்டுமே ஆசிரியர்களை அவ்வப்போது சந்திக்கலாம். மற்ற சந்தர்ப்பங்களில், மாணவர்கள் தங்கள் முழு நாளையும் ஒரு பாரம்பரிய பள்ளி கட்டடத்தில் செலவிடலாம், ஆனால் அவர்கள் ஆசிரியரிடமிருந்து அறிவுறுத்தல்களைப் பெறுவதை விட நிகழ்நிலை மற்றும் சுயவழிப்படுத்தப்பட்ட கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளிலும் (Activity) செயலாற்றுகைகளிலும் (Process) அதிக நேரம் செலவிடுவார்கள்.

கடந்த இரண்டு வருடங்களில், எண்மிய மற்றும் நிகழ்நிலை கற்றல் செயற்பாடுகள் பாடசாலைகள், மற்றும் பல்கலைக்கழகங்களில் மிகவும் பிரபலமாகி, பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன, இருப்பினும் பல பாட-சாலைகளில் போதிய நிதி, தொழில்நுட்பங்கள் மற்றும் ஆளணி வளம் போன்ற காரணங்களுக்காக புதிய தொழில்நுட்பங்களைப் பின்பற்றி புதிய வழமைக்கு வருவதற்கு தயக்கம் காட்டுகின்றன.

பொதுவான நிறுவனம் சார் கட்டமைப்பு மறுசீரமைப்பு மற்றும் மாற்றத்திற்கான கணினி மற்றும் தொழில்நுட்ப சாதனங்கள் இணையம் மற்றும் பெரும்பாலான எண்மிய கற்றல் தொழில்நுட்பங்கள் இன்னும் ஒப்பீட்டளவில் சில பாடசாலைகளுக்கு புதியதாக இருப்பதால், கலவைக் கற்றல் போன்ற போதனாத்துவ நுட்பங்கள் நடைமுறைச் சீர்திருத்த உத்திகளாகக் காணலாம். அதாவது, கலவைக் கற்றலை இணைப்பதன் மூலம், பாடசாலைகளும் ஆசிரியர்களும் தங்கள் போதனாத்துவ வழிகளை மாற்ற வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.




பாரம்பரிய கற்றல் கற்பித்தலுக்கு அப்பால் வரலாற்று ரீதியாக அறிவுறுத்தல்களை வழங்கி மாணவர்களுடன் உரையாடியுள்ளனர். எடுத்துக்காட்டாக, மாணவர்கள் நேரிலும் நிகழ்நிலையிலும் கற்கத் தொடங்கினால், பாட-சாலைகள் தங்கள் பாரம்பரிய பாட அட்டவணையை மறுபரிசீலனை செய்ய வழிவகுக்கும் அதேவேளை மற்றும் வழக்கமான பாடசாலைக் கலண்டர் எவ்வாறு கட்டமைக்கப்பட என்பதை மறுபரிசீலனை செய்யவேண்டிய நிலை ஏற்படலாம்.

பல சந்தர்ப்பங்களில், ஒரு பாடசாலை அல்லது பல்கலைக்கழக மட்டத்தில் ஒரு பெரிய போதனாத்துவ மாற்றத்தின் ஒரு அங்கமாக கலவைக் கற்றல் முறை உள்ளது.

பொதுவாக, கலவை கற்றல் பல சாத்தியமான நன்மைகள் மற்றும் பாதகமான விளைவுகளையும் வழங்குகிறது. அவை வகுப்பறையில் அல்லது கல்வி நிறுவனங்களில் கொடுக்கப்பட்ட கலவைக்-கற்றல் மாதிரியின் வடிவமைப்பு மற்றும் செயலாற்றுகைகளின் தரத்தைப் பொறுத்து அதன் விளைவுகளின் தரம் மதிப்பிடப்படும்.

கலவைக் கற்றல் மாணவர்களுக்கு நிகழ்நிலை கற்றல் மற்றும் நேர் நிலைக் கற்பித்தல் ஆகிய இரண்டின் நன்மைகளையும் வழங்குகிறது என்று வாதிடலாம். எடுத்துக்காட்டாக, மாணவர்கள் நிகழ்நிலையில் தங்கள் சொந்த வேகத்தில் சுயாதீனமாக தன் இயலுமைக்கு ஏற்ப கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட முடியும், ஆனால் ஒரு ஆசிரியரின் தனிப்பட்ட கவனத்தை அணுகலாம் அத்தகைய ஆசிரியர் வழங்கும் அனைத்து உதவி, அறிவுரை மற்றும் வளங்கள் போன்றன கிடைக்காமல் போகும் அதே நேரத்தில், ஆசிரியர்கள் ஒரு பாரம்பரிய வகுப்பறை அமைப்பில் இருப்பதைக் காட்டிலும் மிகவும் நெகிழ்வாக அல்லது ஆக்கப்பூர்வமாக பாடங்களை கட்டமைக்கவும் மற்றும் அறிவுறுத்தல்களை வழங்கவும் முடியும்.

தொடரும்...

## Life

Life is like a river
That runs smooth and fast
Between birth and death
We have to enjoy it most.
Life may have many problems
As the sun rises from the sky
One day all the promises of our life
Will be washed away like a wave.
Life is beautiful like a flower
Lest we enjoy it with a whole heart
It is really a valuable gift
But we have to be honest.
Live a life you love
Love the life you live
It is too brief
Be joyful forever and ever.

**- K. Rajaani , Science Course -**

# இலங்கை சுற்றாடல் முகாமையில் திண்மக்கழிவுகளின் வருகையும் இருப்பும்

- ரொசானி சிங்கராசா -

வண்ணத்தில் மின்னும் சிப்பிக்குள் முத்தெனும் நம் தாய் நாடாம் இலங்கை அது நல்லாரோக்கிய அபிவிருத்தி பெற்றிடவே செயலாற்றும் ஒவ்வோர் இலங்கையருக்கும் இலங்கைச் சுற்றாடலின் ஆரோக்கியத்தில் பங்குண்டு. அந்தவகையில் நம் நாட்டின் சூழல் தொகுதிகளை சுத்தமான முறையில் பேண வேண்டியது நம் ஒவ்வோரினது பொறுப்பு மிகுந்த பணியாகும். இலங்கை அரசாங்கத்தின் புதிய திண்மக் கழிவகற்றல் மற்றும் மீள் சுழற்சிக்கொள்கை என்ன வென்பதை அறிந்து கொள்வதற்கு நாம் காத்துக்கொண் டிருக்கின்ற அதேவேளை குப்பைகளை பிரித்து வகைப்படுத் துவது ஒவ்வொரு தனிமனிதரினதும் பொறுப்பாகும்.

பல சந்தர்ப்பங்களில் தலைநகர் கொழும்பில் மேட்டுக் குடியினர் வாழ்கின்ற சில பகுதிகளில் நாட்கணக்காக குப்பை சேகரிக்கப்படாமல் வெளியில் கிடக்கும் நிலைக்கு வழிவகுத்திருந்தது. ஏனென்றால், அந்தப் பகுதிகளில் வாழ்பவர்கள் தங்களது குப்பைகளை வகைப்படுத்த விரும் பவில்லை. இந்த நிலைமை பொறுப்புணர்வு தொடர்பில் குடிமக்கள் மத்தியில் விழிப்புணர்வை தோற்றுவிக்க வேண்டிய அவசியத்தை உணர்த்தி நிற்கிறது. நமது நாட்டுமக்கள் மத்தியில் அந்தப் பொறுப்புணர்வு தற்போது அறவே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். அடுத்த வரைப் பற்றி யோசிக்காமல் கழிவுகளை புகைவண்டி, பேரூந்துகளில் மற்றும் ஆடம்பரக்கார்களுக்குள் இருந்து வெளியே வீசுகிறார்கள். இதனால் எம் நாட்டின் இயற்கை எழில் கொண்ட பல பகுதிகளில் அங்குமிங்கும் பிளாஸ்டிக் மற்றும் உணவுக்கழிவுகள் குவிந்து காணப்படுகின்றன. இதுமிகவும் கவலைக்குரியதொரு நிலவரமாகும். பாட சாலை மட்டத்தில் இருந்தே சுற்றாடல் பாதுகாப்பு தொடர்



பான உறுதியான நெறிமுறை பற்றிய போதனைகளைச் செய்வதன் மூலமாக குப்பைகளைக் குறைந்தபட்சமாக் குவது, அப்புறப்படுத்துவது மற்றும் மீள்சுழற்சி செயற்பாடு களை சமூகத்துக்கு பரிச்சயமாக்க வேண்டியது அவசிய மாகும்.

அந்தவகையில் திண்மக்கழிவுகள் என்றால் என்ன என்பது பற்றி நோக்குவோமானால், நாளாந்த வாழ்க்கைச் செயற்பாடுகளிலிருந்து உருவாகும் பொருளாதார பெறுமதி யற்ற திண்மப்பொருட்கள் என விபரிக்கப்படுகின்றது. அதாவது வீடுகள், வைத்தியசாலைகள், வர்த்தக வியாபார, கைத்தொழில் மற்றும் விவசாய செயற்பாடுகளினால் மட்டுமன்றி பொதுத்துறைகளாலும் வெளியேற்றப்படுகின்ற திரவமல்லாத கழிவு திண்மக்கழிவு என வரையறுக்கப் படுகின்றது.

திண்மக்கழிவானது உணவுக்கழிவுகள், கட்டட நிர்மா ணக்கழிவு, தொழிற்சாலைக்கழிவு, கடதாசி, உலோகங்கள், பிளாஸ்டிக்கண்ணாடி முதலானவற்றையும் பொதி செய்வத னால் உண்டாகும் கழிவுகள் போன்ற பல்வேறுபட்ட வித்தியாசமான பொருட்களினை உள்ளடக்குகின்றது. திண்மக் கழிவுகளானது நாட்டுக்கு நாடும், வீட்டுக்கு வீடும், தொழிற்சாலைக்கு தொழிற்சாலையும் வேறுபடு கின்றது. சிலவேளைகளில் குறிப்பிட்ட சில பொருட்கள் குறித்த நாட்டினில் அல்லது தொழிற்சாலையினால் அல்லது நபரினால் கழிவுகளாகக் கருதப்படலாம். எமது பிரதேசத்தில் கடதாசி, தேங்காய்சிரட்டை, பிளாஸ்ரிக் என்பனவற்றை திண்மக்கழிவுகளாக கழிக்கின்றார்கள். உண்மையில் இவை பெறுமதியுள்ள வளங்களாகும். உகந்த முகாமைத்துவத்தின் ஊடாக இப்பொருட் களிலிருந்து பல நன்மைகளினை பெற்றுக்கொள்ளலாம். எமது மாநகரசபையும் திண்மக்கழிவுகளை தரம் பிரித்து சேதனப் பசளைகளாக மாற்றி விற்பனை செய்து வருகின்றோம். இப்பசளைகளை பூங்காக்கள், தெருக்கள், வீதிகள் போன்றவற்றை அழகுபடுத்துவதற்காகவும் தற் பொழுது வயல் நிலங்களைக் கூட வாங்கி பயணப்படுத்தி உச்சபயனை அடைந்திருக்கின்றார்கள்.

திண்மக்கழிவு மேலாண்மை என்பது கழிவுப்பொருட் களை சேகரித்தல், கொண்டுசெல்லுதல், பாதிப்பில்லாத உருவுக்கு மாற்றல், மீள் சுழற்சிக்குள்ளாக்குதல் அல்லது நீக்குதல், மற்றும் கழிவுப்பொருட்களை கண்காணித்தல் ஆகிய செயற்பாடுகளை உள்ளடக்கியதாகும். இந்தச்சொல் பொதுவாக மனித செயல்பாடுகளால் விளையும் கழிவுப் பொருட்களைக் குறிக்கும். மேலும் கழிவுப்பொருட்களால் மனிதனின் உடல்நலம், சுற்றுச்சூழல் அல்லது அழகியல் தன்மை ஆகியவற்றில் ஏற்படும் பாதிப்பை முடிந்த அளவு தடுக்கவோ குறைக்கவோ மேற்கொள்ளப்படுகிறது. வள ஆதாரங்களை கழிவுப்பொருட்களில் இருந்து மீட்பதற்கும் கழிவுப்பொருள் நிருவாகம் தேவை. கழிவுப்பொருள் நிருவாகத்தில் தின்ம, நீர்ம, வளிம கழிவுகளையும் சில வேளைகளில் கதிரியக்க பொருட்களையும் கையாள வேண்டிய சூழ்நிலைகள் ஏற்படலாம். ஒவ்வொருவகை கழிவுக்கும் அதற்கேற்ற தனிப்பட்ட முறைகளை அதற்கான வல்லுனர்களின் உதவியுடன் கவனத்துடன் செயலாற்ற வேண்டும்.

2010 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட பிலிசறு தேசிய திண்மக்கழிவு முகாமைத்துவ செயற்றிட்டம் போன்ற ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் முன்முயற்சிகளை மேம்படுத்துவதற்கு மாநகர சபைகள், நகரசபைகள் மற்றும் பிரதேச சபைகள் மத்திய சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையுடனும் நாட்டு மக்களுடனும் தனியார் துறையுடனும் எவ்வாறு சேர்ந்து பணியாற்ற முடியுமென்பதைக் கண்ட றிவதற்கு ஒருங்கிணைந்த அணுகுமுறையொன்று நாட்டு க்கு மிகமிக அவசியமாகத் தேவைப்படுகிறது.

பிலிசறு தேசியதிண்மக்கழிவு முகாமைத்துவச் செயற்றிட்டம் எதிர்நோக்கிய முக்கியமான சவால் மக்களிடமிருந்து போதுமான ஒத்துழைப்புக் கிடைக்காமையேயாகும். கொரிய மற்றும் ஜப்பானிய அரசாங்கங்கள், உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் நன்கொடைகளின் ஆதரவுடன் 560 கோடி ரூபா செலவில் நடைமுறைப்படுத்தப்படுமென்ற உறுதிமொழியுடன் இலங்கை அரசாங்கத்தினால் தொடங்கப்பட்ட அந்த செயற்திட்டம் குப்பை அகற்றல் முகாமைத்துவம் தொடர்பில் தேசியக் கொள்கையொன்றையும் தேசியத் தந்திரோபாயமொன்றையும் வகுப்பதையும் இந்தத்துறையுடன் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பயிற்சிகளை வழங்குவதையும் விழிப்புணர்வு பிரசாரமொன்றை முன்னெடுப்பதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது.

மீள்சுழற்சி செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு மத்திய சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை 125 க்கும் அதிகமான உள்ளூராட்சிச் சபைகளுக்கு நிதியுதவியையும் தொழில்நுட்ப ஆதரவையும் கொடுக்கிறது என்கின்ற அதேவேளை முறையாகப்பிரித்து வகைப்படுத்தப்படாத குப்பைகளை மீள்சுழற்சி செய்வதில் பெரும் செலவு ஏற்படுகிறது என்பது இங்கு வலியுறுத்தி சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும். திண்மக்கழிவுகளின் முகாமைத்துவம் மற்றும் மீள்சுழற்சி செயற்பாடுகளை முன்னெடுப்பதில் சிறிய தீவுகளாக அமைந்திருக்கக் கூடிய நாடுகள் குப்பை அகற்றுவதில் எதிர்நோக்கப்படக்கூடிய சவால்களை மக்களின் பங்கேற்பை உறுதிசெய்கின்ற சட்டங்களை பெருமளவுக்கு அடிப்படையாகக் கொண்டு எவ்வாறு நடைமுறைச் சாத்தியமான முறையிலும் விஞ்ஞான பூர்வமாகவும் கையாளுகின்றன என்பதற்கு ஜப்பானும் சிங்கப்பூரும் நல்ல உதாரணங்களாகும்.

தெற்காசியநாடுகள் அவற்றின் குப்பைகளை பசளையாக்குவது குறித்து ஏன் அக்கறையுடன் சிந்திக்கவில்லை என்பது கேட்கப்படவேண்டியதொரு முக்கியமான கேள்வியாகும். ‘தெற்காசியாவில் மாநகர சேதனக்கழிவை நோக்கி’(Towards Municipal organic waste in south Asia) என்ற தலைப்பிலான ஆசிய அபிவிருத்தி வங்கியின் 2011 அறிக்கையொன்றில் சுட்டிக்காட்டப்பட்டதைப்போன்று தெற்காசிய பிராந்தியத்தின் திண்மக்கழிவுகளில் குறைந்தபட்சம் 70 சதவீதமானவை சேதனப்பொருட்களாகும். தெற்காசியாவில் அநேகமாக சகல நாடுகளும் நகரங்களில் குப்பை அகற்றல் மற்றும் சுகாதாரப்பராமரிப்பு தொடர்பில் அதுவும் குறிப்பாக பிளாஸ்டிக் ஆபத்து தொடர்பில் ஏதோவொரு கொள்கையைக் கொண்டிருக்கின்ற போதிலும், மெத்தனமான போக்கினாலும் செயற்திறனின்மையாலும் சிக்கல் ஏற்பட்டுவிடுகிறது. இது தெற்காசியா பூராகவும் காணப்படக் கூடியதாக இருக்கின்ற ஒரு பொதுவான நிலைமையாகும்.

பெரும்பாலான தெற்காசிய நாடுகளிலே, சுகாதாரப் பராமரிப்புக் கழிவுகள் விளைவுகளைப்பற்றி பொருட்படுத்தாமல் கவனமற்ற முறையில் மாநகர திண்மக்கழிவு கொட்டும் இடங்களில் அல்லது திறந்த வெளிகளில் போடப்படுகின்றன என்று தெற்காசியாவில் சுகாதாரப் பராமரிப்பு கழிவு முகாமைத்துவ தொடர்பில் சிவிஸ்வநாதனும் ராதா அதிகாரியும் மேற்கொண்ட ஆய்வுக்குப் பிறகு அவர்களினால் 2006 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பெரும்பாலும் பதிவு செய்யப்படாத முறையில் பல்கிப் பெருகும் கிளினிக்குகளும் சுகாதார நிலையங்களும்

பொறுப்பற்ற முறையில் உயிரியல் மருத்துவக் கழிவுகளை கொட்டுவதன் மூலமாக பெரும் சுற்றுச்சூழல் அழிவை தோற்றுவித்திருக்கின்றன. இதன் விளைவாக இந்த நிலையங்கள் தொற்றுநோய்கள் பரவுவதற்கு பெரிதும் காரணிகளாக இருக்கின்றன. அரசாங்க ஆஸ்பத்திரிகளில் கூட கழிவு முகாமைத்துவம் திருப்திகரமானதாக இல்லை என்றும் அந்த ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மருத்துவக்கழிவுகளை உகந்த முறையில் அப்புறப்படுத் தாமல் விடுவது ஒரு குற்றச்செயல் என்று இலங்கை மத்திய சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையினால் ஒழுங்கு விதிகள் வர்த்தமானியில் பிரகடனம் செய்யப் பட்டிருக்கின்ற போதிலும், நடைமுறையில் இது ஒரு பிரச்சினைக்குரிய விவகாரமாகவே தொடருகிறது. செலவுச் சுருக்கமான முறையிலும் விரைவாகவும் மருத்துவக் கழிவு அகற்றலை முகாமைத்துவம் செய்வதற்கு ஒருசில உள்ளக செயற்றிட்டங்களே கடைப்பிடிக்கப்படுகின்றன. மருத்துவக் கழிவுகளை தொற்று நீக்கிய பிறகு குப்பை கொட்டும் இடங்களில் போடுகின்ற பணி பெருமளவுக்கு விரிவுபடுத்தப்பட வேண்டியதொன்றாக இருக்கிறது.

ஏற்கனவே உலகறிந்த மீதொட்டமுல்ல குப்பைமேடு குறித்தும் அங்கு கந்தல்களைப் பொறுக்குகின்றவர்கள் குறித்தும் 2016ம் ஆண்டு செய்தியறிக்கையொன்றை வெளியிட்ட இலங்கையின் சண்டே ஒப்சேவர் பத்திரிகை குப்பைகளுக்குள் ஆஸ்பத்திரிக் கழிவுகளும் மனித குடல்களும் கண்டெடுக்கப்பட்டதைப்பற்றி விபரித்திருந்தது. “குப்பை மீது காலடி வைத்து நாற்றமெடுக்கும் கழிவுகளின் ஊடாக நடந்து சென்ற போது நரகத்தின் ஊடாக செல்வது போன்று இருந்தது. உணவுக் கழிவுகள், பிளாஸ்டிக் பொருட்கள், துத்த நாகத்தகடுகள், கடதா-சிகள், உடுப்புகள், ஆஸ்பத்திரிக் கழிவுகள், இலத்திரனியல் கழிவுகள், பிராணிகளின் சடலங்கள் மற்றும் மனித உள்ளுறுப்புகள் எங்குமே பரவிக் கிடந்தன” என்று கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனவே, கழிவு அகற்றலை ஒரு தேசியப் பிரச்சினை யாகவும் அதேவேளை, பிராந்தியரீதியில் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாகவும் கருதுகின்ற ஒரு மனநிலை-யை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தக்கூடிய பொறிமுறை யொன்று அவசியம். அத்தகைய பொறிமுறையின் ஊடாக ஒத்துழைத்துச் செயற்படுவதே அரசினதும் பொது மக்களினதும் கடமையாகும். கழிவு அகற்றலில் வெற்றி கரமான ஒரு செயற்றிட்டத்தை இலங்கை முன்னெடுக் குமாக இருந்தால், எமது பிராந்தியத்தில் இருந்து குப்பை என்ற கறையை அழிப்பதற்கு உதவுவதில் அயல்நாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும். ஆகவே. இலங்கைப் பிரஜை என்றவகையில் திண்மக் கழிவுகளை முறையாக முகாமை செய்து மீள்பயன்பாடு மற்றும் மீள்சுழற்சி செயற்பாடுகளினூாக இலங்கை ஆரோக்கியமான அபிவிருத்தி அடைந்திட அனைவரும் ஒன்றிணைந்து கைகோர்ப்போம்.

**“ மாற்றத்தை உங்களிடமிருந்து ஆரம்பியுங்கள் ”**

# சமூகத்தின் பார்வையில் விசேட கல்வி ஆசிரியர்களின் நிலை

- தி.திலிப்குமார், விசேட கல்வி -



ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய வாழ்க்கையை நடாத்தி செல்வதற்கு பல்வேறு தேவையுடையவர்களாகவே காணப்படுகின்றனர். அவ்வாறான மனிதர்கள் மத்தியில் அதிக தேவையுடயவர்களை விசேட தேவையுடையோர் எனலாம். விசேட கல்வி என்பது விசேட தேவைகளை வேண்டி நிற்கும் மாற்றுத் திறனாளிகளது ஆற்றல்களை வளர்க்க உதவு கின்ற ஒரு கல்வி முறையாகும். இச் சேவையை வழங்குகின்றவர்களே விசேட கல்வி ஆசிரிய ர்களாவர்.

கல்விமுறையில் வலிமைமிக்க சக்தியாக திகழ்பவர்கள் ஆசிரியர். ஆசிரியர் இல்லாத கல்வி ஆன்மா இல்லாத உயிர் போன்றது. ஆசிரியர் தன் மனிதப் பண்புகளைக் கொண்டு, சமூக சீர்திருத்தவாதி என்ற அடிப்படையில் குழந்தைகளிடையே மனிதத் தன்மையும், சமூக மாற்றத் திற்கான பண்புகளையும் வளர்க்க வேண்டும்.

''தனது சுய விருப்பங்களை முன்னுறுத்துவோரை விட பிறர்மீது அக்கறையும், அர்ப்பணிப்பு உணர்வும், பணியின் மீது ஆழ்ந்த பற்றும் உடைய ஆசிரியரே உறுதிப்பாடு மிக்கவர்'' என்று எலியட் மற்றும் கிரால் வெல் கூறுகின்றனர். இவ்வாறான பணியை ஆற்றுபவரே விசேட கல்வி ஆசிரியர் ஆவார்.

இன்றைய சமூகத்தைப் பொறுத்தவரையில் விசேட கல்வி என்றாலே ஏளனமாக பார்க்கும் ஓர் நிலையே காணப்படுகின்றது. அந் நிலை குடும்பங்களில் இருந்தே ஆரம்பமாகிவிடுகின்றன. குடும்பங்களில் விசேடகல்வி ஆசிரியர் எனும் பணியை ஏற்றுக்கொள்பவரை விட அதை நிராகரிப்பவரே அநேகம் காணப்படுகின்றனர். சமூகத்தின் பார்வையில் விசேட கல்வி ஆசிரியர் எனும் பணி ஏனைய பணிகளை விட கீழ்மட்டமாகவே கருதப்படுகின்றது. பாடசாலை சமூகம் கூட அவ்வாறே விசேட கல்வி ஆசிரியரை உருவகித்துப் பார்க்கின்றது. அநேகமான பாடசாலை ஆசிரியர்கள் கூட விசேட கல்வி ஆசிரியர்களை வேறு பிரித்துப் பார்ப்பவர்களாகவே காணப்படுகின்றனர்.

குடும்த்தில் உள்ள உறுப்பினர் கூட ஏனைய பாட தெரிவுகளுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை விசேட கல்வி பாடத்தெரிவுக்கு வழங்குவதில்லை. ஆனால் விசேட கல்வி தொடர்பான பாடநெறிக்கு தெரிவு செய்யப்படுகின்றவர்களை விட கூடிய பெறுபேறுகளையும், z புள்ளிகளையும்

பெற்றவர்களாகவே காணப்படுவார். கல்வியியற் கல்லூரிகளை எடுத்துநோக்கினால் கூட இந்நிலையை காணலாம்.

அதாவது ஏனைய மாணவர்களோடு ஒப்பிடுகையில் விசேட தேவையுடையோர்க்கான பாடசாலையில் கற்பிக்கும் நேரம் குறைவு மற்றும் ஏனைய ஆசிரியர்களுக்கு வழங்கப் படும் மாணவர்களின் எண்ணிக்கையை விட விசேட கல்வி ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை மிகக்குறைவு, மாணவர்களுக்கு பாடவேளை குறைவு என்பது எமது சமூகத்தினாலும் ஏனைய ஆசிரியர்களினாலும் விமர்சிக் கப்படுகின்றது.

விசேட தேவையுடைய மாணவர்கள் சாதாரண மாணவர் கள் அல்ல அவர்களுடைய உண்மை வயதும் உள வயதும் அநேகமாக வேறாகவே காணப்படுகின்றது. ஏனைய மாணவர்களைப் போல விசேட தேவையுடைய மாணவர் களால் வெகுநேரம் கற்றலை மேற்கொள்ள முடியாது. மற்றும் விசேட கல்வி ஆசிரியர் ஒருவர் அதிக நேரம் மாணவர்களுக்கு கற்பிக்க முடியாது. ஏன் எனில் விசேட தேவையுடைய மாணவர்களைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு மாணவனும் வேறுபட்ட குறைபாடு உடையவ னாகவே காணப்படுகின்றனர்.

ஒரு மாணவனுக்கு கற்பிக்கின்ற தேர்ச்சியை வேறு குறைபாடு உடைய மாணவனுக்கு கற்பிக்க முடியாது. இது நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டியதும் புரிந்து கொள்ள வேண்டியதுமான நிதர்சனமான உண்மை. யாரு டைய தயவும் இன்றி தனது சொந்த காலில் நிற்பதற்கான தன்னம்பிக்கையையும் திறனையும் உருவாக்குகின்றவர்களே விசேட கல்வி ஆசிரியராவார்.

விசேட தேவையுடைய பிள்ளைகளைப் பொறுத்தவரை யில் அவர்களின் மனநிலை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வெவ்வேறாகவே காணப்படும். விசேட கல்வி ஆசிரியர் மாணவர்களின் மனநிலைக்கு ஏற்றபடியே அவர்களுக்கு கற்பித்தலை மேற்கொள்ள முடியும். ஏனைய ஆசிரியர்களைப் போல் அல்லாமல் அச் சூழ்நிலையை வெற்றிகரமாய் மேற்கொண்டு மாணவர்களுக்கு கற்றலுக்கு ஏற்ற மனநிலை யை உருவாக்க வேண்டும்.

விசேட தேவையுடைய மாணவர்கள் பல்வேறுபட்ட குண இயல்புகளை கொண்டு காணப்படுவார். அவ்வாறான பல்வேறு இயல்புகளை கொண்டு மாணவர்களுக்கு கற்பித் தலை மேற்கொள்வது மிக சவால் நிறைந்த பணியாகும். அச் சாவல்களை தினம் தினம் வெற்றி கொள்பவரே விசேட கல்வி ஆசிரியர். ஒரு விசேட கல்வி ஆசிரியரால் சாதாரண மாணவர்களுக்கு கற்பித்தலை மேற்கொள்ள முடியும். ஆனால் ஒரு சாதாரண ஆசிரியரினால் விசேட தேவையு டைய மாணவர்களுக்கு கற்பித்தலை மேற்கொள்வது மிகவும் சிரமம்.

இவ்வாறான பல்வேறு சூழ்நிலைகளையும், தடை களையும் தாண்டி கற்றலில் இயலாமையுடையவர்களையும் சமூகத்தினால் ஒதுக்கப்பட்ட பிள்ளைகளையும், மாற்றுத் திறனாளியாய் உள்ள பிள்ளைகளை உலகையே மாற்றக்கூடிய திறனாளிகளாய் உருவாக்குகின்றவர்களே விசேட கல்வி ஆசிரியராவார். இவர்களை வேறு பிரித்தும் கீழ்மட்டமாகவும் பார்க்காது அவர்களுக்குரிய கண்ணியத்தை அவர்களுக்கு வழங்கவேண்டும்.

*****

# “இன்பா”வின் சிந்தனைத் தொடர் – 14

## கதைகளால் நியமாகி...



### இலக்கை நோக்கி

இரண்டு குட்டி நாடுகளுக்கிடையே சின்ன சண்டை. இதில் ஒரு நாடு மலைமேல் இருந்தது. மற்றொன்று மலையின் கீழ் இருந்தது. சண்டையின் போது கீழ் நாட்டில் உள்ள குழந்தை ஒன்றைத் தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள். மலைநாட்டு வீரர்கள் குழந்தையை மீட்க வேண்டுமென்றால் மலைமேல் ஏறவேண்டும். கீழ்நாட்டில் யாருக்கும் மலையேறும் அனுபவம் கிடையாது. இருந்தாலும் அவர்களில் சிறுகுழு ஒன்று மலைமேல் ஏறத்தொடங்கியது.



ஒரு நாள் ஆனது, இரண்டு நாள் ஆனது, மூன்று நாள் ஆனது அவர்களால் கால்வாசி உயரத்தைக் கூட அடையமுடியவில்லை. பத்து நாட்களில் பாதி மலைதான் ஏறியிருந்தார்கள். அங்கே ஒரு கூடாரம் அமைத்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்கள்.




அந்த சமயத்தில் அந்த வழியே ஒரு பெண் மலையில் இருந்து இறங்கிக் கொண்டிருந்தாள். அவள் கையில் குழந்தை அவளைப் பார்த்ததும் அடையாளம் கண்டு கொண்டார்கள். குழந்தையை பறிகொடுத்த கீழ்நாட்டுப் பெண். அவர்களுக்கு ஆச்சரியம் “என்னம்மா மலையிலிருந்து வர்றே?” என்று கேட்க “மலைமேலிருந்து குழந்தையை மீட்டுக்கொண்டு வருகிறேன்” என்று பதிலளித்தாள் அவள். அவர்களுக்கு மேலும் ஆச்சரியம். “எப்படி? எங்களால் இவ்வளவு நாட்கள் முயன்றும் முடியவில்லையே...?” “ரொம்ப எளிமையான காரணம் தான், அது உங்கள் குழந்தை இல்லை”

**நீதி : இலக்கின்மேல் ஆர்வம் இல்லாவிட்டால் வெற்றி கிடைக்காது.**

# போதை இல்லா உலகம்

பூ.யமுனா, நடனத்துறை -




உலக நாகரீகம் வளர வளர மனித வாழ்க்கை முறைகளும் வளர்ச்சி அடைந்து வருகின்றன. நாகரீகம் வளர்ச்சிப் பாதையில் செல்கின்ற அதே தருணத்தில் சில தீய பழக்கங்கள் வலிமை பெற்றுச் செல்கின்றது

அதில் முக்கியமான ஒன்று தான் போதைப்பொருளின் பயன்பாடு அதிகரித்து சமூக ஆரோக்கியத்தை சிதைத்துக் கொண்டிருக்கிறது. மது, போதைவஸ்து, சிகரட் பாவனை போன்ற தீய பழக்கங்கள் வரை உயர் வலிமை பெற்றுள்ளமை வேதனைக்குரியதாகும்.

உடல், உளப் பாதிப்புக்களை ஏற்படுத்துவதும் பாதிப்புக்களை ஏற்படுத்துவதும், சமூகப் பிரச்சனைகளைத் தோற்றுவிப்பதுமான போதைக்காக நுகரப்படும் அல்லது உடலினுள் செலுத்தப்படும் பொருட்கள் போதைப் பொட்கள் எனப்படும். உதாரணமாக அபின், கஞ்சா, ஐஸ் போன்றனவைக் கூறலாம்.

சமுதாயத்தில் மாணவர்களும், படித்தவர்களும் நிரம்பி இருக்கிறார்கள். அத்தகைய நல்ல சமூகத்துக்குச் சவாலாக இருக்கும் போதைப் பொருள் இந்த சமூகத்தின் வளர்ச்சிக்கு சவாலாக உள்ளது. போதைப் பொருளுக்கு அதிக அளவில் இளைஞர்கள் இரையாதவன் மூலம் அவர்கள் எதிர்காலம் பாதிக்கப்படுகின்றது. போதைப் பழக்கம் சமூகத்தை சாபக்கேடாக மாறி வருகிறது.

போதைப் பாவனையால் ஏற்படும் சமுதாய பிரச்சினைகள் போதைக்கு அடிமையாகி விட்டால் சொந்த வீட்டலேயே திருடுதல் பொருட்களை அடகு வைப்பது, பிச்சை எடுப்பது, அசிங்கமாக நடந்து கொள்வது, பிறரை துன்புறுத்துவது போன்ற செயல்களில் ஈடுபடுகின்றன. வெளியிடங்களில் அடிதடி, கொலை, கொள்ளை, தீவிரவாத செயற்பாடுகள் போன்ற வன்முறை செயற்பாடுகளும் ஏற்படுகின்றன.

ஒரு தேசத்தை அல்லது ஓர் சமுதாயத்தை அல்லது தனிநபரை திட்டமிட்டு நசுக்கிவிட ஏவப்படுகின்ற ஆயுதமே போதைப் பொருள் ஆகும். போதை என்னும் ஆயுதமே மனித வாழ்க்கையை மட்டுமல்லாமல் தனிமனித கௌரவம், அந்தஸ்து, பணம் போன்றவற்றை அழிப்பது மட்டுமல்லாது உயிரையும் காவு

காவுகொள்கின்றது. எனவே இதனை ஒவ்வொரு மனிதர்களும் உணர்ந்து தமது உள்ளத்தில் நற்சிந்தனைகளை வளர்த்து தீய வழிகளில் செல்லாமலும் போதைப் பாவனை தொடர்பாக விழிப்புடன் இருத்தல் வேண்டும்.

போதைப் பாவனையால் சளி, இருமல் போன்ற பிரச்சனைகள் ஏற்படுவதோடு, உணவுக் குழாயிலும், கணையத்திலும், நுரையீரல் புற்றுநோய் போன்ற பாரிய நோய்களும் ஏற்படுகின்றன. சரியாக உணவு எடுத்துக் கொள்ள முடியாமல் போவாதாலும் வயிற்றில் புண், எடை குறைவு, நோய் எதிர்ப்பு சக்தி குறைவு, உடல் சோர்வு போன்ற பிரச்சனைகள் ஏற்படுகிறது.

ஊலக அளவில் போதைப்பொருபட்களின் தாக்கமும் அதனால் சமூகம் அடையும் பின்னடைவும் சீர்கேடும், சிதைவும் அதிர்ச்சியூட்வதாக உள்ளது. போதைக்குள் செல்லாமல் இருப்பதே ஒரு மனிதன் செய்யும் மிகச் சிறந்த செயல் எனலாம்.

*போதைப் பாவனையை ஒழிப்போம்.*

*போதையில்லா உலகை உருவாக்க பங்களிப்பு செய்வோம்.*

## உயிர்காக்கும் தமிழ்

*செந்தாமரைச் செல்வி செந்தமிழ் பேச*
*செங்காந்தள் நறுமணர் கமல*
*செவ்வானம் கண்ணை கவர*
*செந்தமிழ் மாலை புனைகிறாள் - மாது*

*உயிர் முதலாம் அவில் தொடங்க*
*உடன் பிறப்புகள் பின் தொடர*
*உயிர் நிகர் செந்தமிழ்*
*உயிர் இனிக்கும் சுகம் அறிவாயோ!!*

*செம்மொழி காக்கும் வீர்ராய்*
*செம்மொழி காத்து குலம் வளர்க்க*
*செங்குருதி சமர்ப்பணம் அன்று*
*செம்மை காண வழிஎதுவோ எனி!!*

*மனம் துடிக்க இழந்தவை எல்லாம்*
*மனம் துணிகையில் மாட்சிமை கண்டிடும்*
*மனம் மகிழ் மாற்றங்கள் மாண*
*மனம் துளிர் விடும் செந்தமிழாய்*

*ஆயிரம் கரங்கள் இணைந்தே*
*ஆர்ப்பரிக்கும் மொழி எங்கள் தமிழ்மொழி*
*ஆற்றல்கள் பெருக்கிடும் எம்மொழி*
*ஆருயிர்க்கு மேல் எம்மொழி!!*

- அனிந்திகா நடேஸ்வரன்,
ஆரம்பகல்வி -

### *தொட்டு தொட்டு பார்த்தால் அது வெறும் காகிதம், தொடர்ந்து படித்தால் வாழ்வில் வெற்றியின் ஆயுதம்*

வேறு எதுவோ... அதுவே புத்தகங்கள் ஆகும். “புத்தகம் இல்லா அறை உயிர் இல்லாத உடலுக்கு ஒப்பானது ”என்றார் சிசரோ அது மட்டுமா? மனிதனுடைய ஆக ச்சிறந்த கண்டுபிடிப்பு புத்தகங்களை தவிர வேறு என்ன? என்றார் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்.

திரைப்படப் பாடல் ஆசிரியரும் கவிஞருமான நா.முத்துக்குமார் அவர்களும் புத்தகத்தை பின்வருமாறு கூறுகிறார். புத்தகங்களை நேசி ஒரு புத்தகத்தை தொடுக்கின்ற போது நீ ஒரு அனுபவத்தை பெறுவாய்” என்று கூறியுள்ளார். எனவே புத்தகங்களே வாழ்வில் சிறந்த நண்பர்கள் ஆகின்றன. உலகில் உயர மான இடத்திற்கு சென்றவர்கள் பலரும் புத்தக பிரியர்களே ஆவார்கள் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இது இவ்வாறு இருக்க புத்தகங்களின் முக்கியத்துவம் எனும் போது நூல்களின் முக்கியத்துவம் அறிந்த நம் முன்னோர்கள் பனை ஓலையில் எழுதப்பட்ட பதிவுகளை துளையிட்டு நூல்கயிற்றில் கோர்த்து பத்திரப்படுத்தி வைத்தனர்.

எப்போதோ நிகழ்ந்ததை இப்போது அறிந்து கொள்ள புத்தகங்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. நம் அறிவைப் பெருக்கிக் கொண்டு வாழ்வில் வளம் பெற புத்தகங்கள் முக்கியமானவை ஆகும். தெரியாத விடபங்களை தெரிந்து கொள்ளவும் புதிய விடயங்களை கற்றுக் கொள்ளவும் இப்ப புத்தகங்கள் உதவுகின்றன. உலகின் பெரிய மேதைகள் அனைவரும் புத்தகம் வாசிக்கும் பழக்கத்தின் மூலம் உருவானவர்களே. நூல்களை வாசிப்பது என்பது ஓர் அற்புதமானகலையாகும் கிரேக்க சிந்தனை ஆளரான சாக்ரடீஸ் மரண தண்டனை விதிக்கப்பட்டு நஞ்சி

## புத்தக பிரியரா நீங்கள்?

ராஜரத்னம் சர்மிளா
இசைத்துறை



கொடுக்கும் வேலையிலும் புத்தகம் படித்துக் கொண் டிருந்தார் என்பதிலிருந்து புத்தகத்தின் மகிமை உணர்த்தப்படுகின்றது. நேரு அவர்கள் தன்சடலத்தின் மீது மலர்களுக்கு பதிலாக புத்தகங்கள் வைக்கச் சொன்னார் இது அவர் புத்தகங்கள் மீது கொண்டிருந்த பிரியத்தை எடுத்துக்காட்டுகின்றது.

இதுபோல் பேரறிஞர் அண்ணா அவர்கள் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சமயம் அறுவை சிகிச்சை அன்று தான்

படித்த புத்தகத்தின் சில பக்கங்கள் பாக்கி இருப்பதால் அதை முடிக்கும் வரை உயிர்காக்கும் அறுவை சிகிச்சையை தள்ளி வைக்க சொன்னார். இப்படி எல்லா மனங்களிலும் உயர்ந்த இடத்தில் புத்தகங்கள் திகழ்கின்றன இவை காரிருளில் செல்பவர்களுக்கு பேர் ஒளியாகவும் வழிதவறி செல்பவர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும் திகழ்கின்றது ஒருவன் பயிலும் சிறந்த புத்தகங்கள் அவரின் சிறந்த நண்பர்களாக விளங்குகின்றன. ஓய்வு நேரங்களை பயனுள்ளதாக கழிக்கவும் அறிவை மேம்படுத்தவும் புத்தகங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. அறிவு பசிக்கு புத்தகங்கள் தீனி போடுகின்றன.

ஒருவன் எவ்வளவு தூரம் நூல்களை தேடி படிக்கின்றானோ, அவ்வளவு தூரம் அவனது படைப்பாற்றல் நிலைத்திருக்கும். "நீரளவே ஆகுமாம் நீராம்பல் தான் கற்ற நூல் அளவே ஆகுமாம் நுண்ணறிவு என்கின்றார் அவ்வையார். இதற்கிணங்க நல்ல புத்தகங்களை படித்து வாழ்வில்வளம் பெற்று நாமும் புத்தக நண்பரோடு இணைந்து புத்தகப் பிரியர்கள் ஆகுவோம்.




# நான் இரசித்த கதை சோக்ரடீஸ் புத்தகத்திலிருந்து நான் வாசித்த பக்கங்கள்

## ஒரு மாணவன் எப்படி இருக்க வேண்டும்

- வி. திவாணி, நடனத்துறை -



சோக்ரடீஸிடம் அவருடைய மாணவன் ஒருவன் வந்தான். ''ஐயா, மாணவன் எப்படி இருக்க வேண்டும்?'' என்று கேட்டான்.

அதற்கு சோக்ரடீஸ், "மாணவன் என்பவன், கொக்கைப்போல இருக்க வேண்டும். கோழியைப் போல இருக்க வேண்டும். உப்பைப் போல இருக்க வேண்டும். உன்னைப்போல இருக்க வேண்டும்'' என்றார்.

மாணவனுக்கு ஒன்றும் புரியவில்லை. ''கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கள் ஐயா'' என்றான்.

அதற்கு சாக்ரடீஸ் "கொக்கு, ஒற்றைக் காலில் நீண்டநேரம் பொறுமையாக நிற்கும். மீன்கள் வந்தவுடன் விரைந்து செயல்பட்டுப் பிடித்துவிடும். அதுபோல, ஒரு மாணவன் சரியான வாய்ப்புக் கிடைக்கும்போது அதைப் பயன்படுத்தி, அரிய செயல்களைச் செய்ய வேண்டும்'' என்றார்.

''கோழியைப்போல இருக்க வேண்டும் என்றீர்களே அதற்கு என்ன அர்த்தம்?'' என்று கேட்டான் மாணவன்.

“கோழி என்ன செய்யும்? குப்பையைக் கிளறும். ஆனால், அந்தக் குப்பைகளை விட்டுவிட்டு தனக்குத் தேவையான உணவை மட்டும் எடுத்துக்கொள்ளும். அதுபோல, மாணவர்கள் தாம் சந்திக்கும் தீமைகளைத் தூரம் தள்ளி விட்டு, நன்மைகளை மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும்’’ என்றார் சோக்ரடீஸ்.


’’அடுத்தது, உப்பைப்போல இருக்க வேண்டும் என்றீர்களே...’’ என்று கேட்டான்.

“ஆமாம். உப்பை எந்த உணவோடு கலக்கினாலும், அது இருக்கிறது என்று கூற முடியும். ஆனால், கலக்கிய உணவில் உப்பு கண்ணுக்குத் தெரியாது. அதன் சுவையை மட்டுமே உணர முடியும். அதுபோல, மாணவர்கள் எந்தத் துறையில் இறங்கினாலும் அதில் சிறப்பான தனித்தன்மையை வெளிப்படுத்தி, தனது மறைவுக்குப் பின்னும் அதை இவர்தான் செய்தார் என்று கூறும்படி விளங்க வேண்டும்’’ என்றார்.

“எல்லாம் சரி, உன்னைப் போல இருக்க வேண்டும் என்றீர்களே... அதற்கு என்ன அர்த்தம்?’’ என்று கேட்டான்.

“மாணவன் என்பவன் தனக்குள் எழக்கூடிய சந்தேகங்களை, எந்தவிதத் தயக்கமும் இல்லாமல் ஆசிரியரிடம் கேட்டுத் தெளிவு பெற வேண்டும். அதற்காகத்தான் உன்னைப்போல இருக்க வேண்டும் எனச் சொன்னேன்’’ என்று புன்னகைத்தார் சோக்ரடீஸ்.

அந்த மாணவன் மகிழ்ச்சியுடன் அவரை வணங்கினான்.



## மாற்றம் ஒன்றே மாறாதது


மாறும் உலகினில் மாறாதது
மாற்றம் ஒன்றே
தோற்றம் மாறும் உறவு மாறும்
காலம் மாறும் கடமை மாறும்
ஏன் உலகமே மாறும்
யாவரும் கேளிர்
மாற்றம் ஒன்றே மாறாதது

யாரும் அறியாத உண்மை
எல்லாம் மாறும் என்பதை
எதுவும் நிலையானது அல்ல
அன்பு மாறலாம் பண்பு மாறலாம்
கல்வி மாறலாம் களங்கம் மாறலாம்
மாற்றம் ஒன்றே மாறாதது

மாற்றம் புதியதொன்றல்ல
அது பழமை வாய்ந்தது
பழையது புதிதாக மாறலாம்
கஷ்டம் இஷ்டமாக மாறலாம்
நேற்று நாளையாக மாறலாம்
குற்றம் குணமாக மாறலாம்
ஒழுக்கம் மாறலாம்
ஏன் பழக்கம் மாறலாம்
மாற்றம் ஒன்றே மாறாதது

சிறுமை பெருமையாகலாம்
கனவும் நிஜமாகலாம்
கற்பனை கதையாகலாம்
மரம் மனிதனாகலாம்
வாழ்வின் நிஜம் புரிந்தும்
நடத்தையில் மாற்றத்தை
ஏன் ஏற்க மறுக்கிறாய்?
யாவரும் அறிவீர் மானிடரே
மாற்றம் ஒன்றே மாறாதது

- Tharanka Sritharan, English Course -



# Friendship



- Tharanka Sritharan, English course -

This world of ours consists of many living and non living things, among which man is considered supreme. Though man differs from one another in many ways, he still cultivates relationship with others. He cannot exist alone. He needs companionship. This gradually blooms into a closely knitted relationship, a bond, called friendship.

Friendship is usually an everlasting bond among human begins. Everyman cultivates friendship with one or many persons. In this busy world weather a person is good or bad, cruel or pleasant he will have a friend. Friendship doesn't depend on caste, creed or age.

Friendship gradually gets deeply rooted in the hearts of everyone. Not only human beings, even animals maintain friendships though we can't see that very clearly. True friendship is a valuable thing, which usually exists until the death of every man. Everybody in the world can freely share their happiness, sadness and problems with their friends. "A friend in need is a friend indeed'' is a universal truth. In the victory of a person there will definitely be the effect of friendship, because a friend can guide another friend in a positive way by advising and encouraging him or her.

Sometimes we may be afraid or ashamed to share our problems with our parents or siblings. But we feel free to share certain things with our friends or reveal our problems to our friends. This is because we rely on true friends to a great extent. We can live without many things in life, but nobody can survive without friendship.

A friend is the sole companion of many. If we get a good friend in our life, then I feel we are the most lucky persons in this world. Any person may neglect anyone, but no one will neglect a friend because the bond of friendship is so strong. A true friend can be mother, guide and guardian. In this world many persons may say various things about friendship, but I can say for certain, that only true friendship can guide the destiny of a person towards success.

2

# எனது மகள் உயிரோடு இருப்பதை விட மரணிப்பதே நல்லது

*ஒரு வைத்தியரின் அனுபவ பகிர்வை கதையாக்கி பகிர்கிறேன்*

**- சி.டஜானா, ஆரம்பபிரிவு -**

“மோசமான நிலைலதான் இருக்கா, போதைப் பொருள் ஒன்றை எடுத்திருக்கா போல, ட்ரீட்மென்ட் ஸ்டார்ட் பண்ணிருக்கோம்” என நான் பதிலளித்தேன்.

“டொக்டர் இது எங்களுக்கு பெஸ்ட் டைம் இல்ல, நிறைய தரம் இவய கொண்டு வந்திருக்கம், என்ன சொன்னாலும் இவ கேக்க மாட்டா, அவ அப்பிடித்தான், வேணா என்டு போயிட்டு” என தந்தை எரிச்சலுடன் கூறினார். “என்ன நடந்த என்னு தெளிவா சொல்ல ஏலுமா” என கேட்ட போது, தாய் பேச ஆரம்பித்தார்.



“இவ எங்கிட ஒரே பிள்ளை என்டதால நல்லா செல்லம் குடுத்து வளர்த்திட்டம், சின்ன வயசில என்ன கேட்டாலும் வாங்கிக் குடுப்பம், எங்க வேணும்னாலும் கூட்டிப் போவம்.

எங்களுக்கு தொழில்லயும் எந்த பிரச்சினையும் இல்ல, ஆனா நாங்க சொந்த தொழில் செய்றதால கொஞ்சம் பிசி, வீட்டு வேலைக்கு ஆள் வெச்சித்தான் இவய பாத்துட்டம்.

இவ நல்ல கெட்டிக்காரி, ஸ்கூல்ல எல்லாத்திலயும் பெஸ்ட்தான். இவட டீச்சர்ஸ் கூட எங்கள கூப்பிட்டு இவள நிறைய தரம் பாராட்டி இருக்காக. இவய பத்தி நாங்களும் பெருமையா எல்லார்டயும் பேசிவோம். O/L மட்டும் நல்லாத்தான் படிச்சா, 9A ரிசல்டும் எடுத்தா.

ஒரே அவ எங்கிட்ட சொல்ரது, வீட்ட நான் தனியத் தான் இருக்கன், நீங்க வாரதுவும் இல்ல, அலுப்பாக (Boring) இருக்கு என்டு.

என்ன செய்ர நாங்க பிஸ்னஸ்ல பிசி எங்கிரதால வீட்ட போக நைட் ஆகிடும். அந்த டைம்தான் இவ பெட்மின்டன் (Bedminton) விளையாட இன்ரஸ்ட்டா இருக்கு, என்ட பிரன்ட்ஸ்சும் போறாக. நானும் போக போறன் என்டா

‘ஆரம்பத்தில எங்களுக்கு விருப்பமில்ல தான். ஆனா இவ அடிக்கடி கேட்டதால நாங்களும் அனுமதிச்சம். இவ தொடர்ச்சியா விளையாட போக ஆரம்பிச்சா’

நாள் போக போக கொஞ்சம் கவலையா, எப்பயும் கோவமாவும் இருந்தா. நாங்க நைட்ல லேட் ஆகி வாரதாலயும், அடிக்கடி வெளிநாட்டு ட்ரிப் போனதாலயும் மகளோட பெரிசா கதைக்க கிடைக்கிரல்ல. சில நாட்கள்ல எனக்கு தெரிஞ்ச ஒராள் வந்து இவ, பொடியன் ஒராளோட

நைட் க்ளப்புக்கு போன போது கண்டதாகச்சொன்னார். நான் அத நம்பல்ல “என்ட பிள்ளையைப் பத்தி எனக்குத் தெரியும், அவ அப்படி செய்ய மாட்டா, இனி என்கிட்ட இப்படி பேசினா நான் சும்மா இருக்க மாட்டேன்” என அவரிடம் சத்தமிட்டேன். மகள் மேல இருந்த அதீத நம்பிக்கையாளதான் அப்படி சொன்னேன்.

கொஞ்ச நாள் போன பிறகு அவக்கு படிப்புல விருப்பமே இல்ல, ஒரே எரிச்சலுடன்தான் இருப்பா, நாங்க என்னயும் கேட்டா ஒரே சண்டைதான். அவக்கு நாங்க வேறயா பேங்ல காசு போட்டு கொடுத்து வெச்சிருந்த. பிறகு நாங்க எக்கவண்ட் செக் பண்ணி பார்த்த நேரம் பேங்ல காசு ஒன்டும் இல்ல, எல்லாத்தையும் எடுத்திட்டா, அடிக்கடி காசு கேட்பா. எங்களுக்கும் அதுக்கு பிறகுதான் இவ வித்தியாசமா இருக்கிறது விளங்கிச்சி, அதால ஸ்கூல் பிரன்ஸ்ட கேட்டம், அவகளும் இவ எங்களோட முன்ன மாதிரி இல்ல என்டும், ஸ்கூலுக்கு வந்தா கதைக்க மாட்டா, தூங்கிட்டே இருப்பா என்டும் சொன்னாங்க.

“நாங்க மகள்ட பேசுவம் என்டு போனா கதவை பூட்டிட்டு தூங்குவா. டொக்டர்ட போவம் என்டா எனக்கு என்ன பைத்தியமா என்டு கேட்டு சண்ட பிடிப்பா. எங்களுக்கு என்ன செய்ர என்டு விளங்கல்ல. நாங்க ரெண்டு பேரும் பெட்மின்டன் கிளாசுக்கு போறத்த நிப்பாட்டுவம் என்டு அவட சொன்ன போது, அவ ரூம பூட்டிக்கிட்டு கைய வெட்டிட்டா. அதால ரெத்தம் ஓடி சாகுற நிலைமைக்கு போயிட்டா. கஷ்டப்பட்டு கதவை உடைச்சித்தான் ஹொஸ்பிட்டலுக்கு கொண்டு போன. அங்க ரெத்தமெல்லாம் போட்டுத்தான் அவய காப்பாத்தின. அதுல இருந்து நாங்க ஒன்டுமே கேக்கிரல்ல.

கொஞ்ச நாள் போன பிறகு பல ஆண்களுடன் பழக ஆரம்பிச்சா. நைட் கிளப் பார்ட்டி என்டு போக ஆரம்பிச்சா. நிறைய தடம் ஹொஸ்பிட்டல்ல அட்மிட் ஆகிருக்கா, குடிக்கிரத்தயே தொழிலா செய்தா. நாங்களும் எவ்வளவு ட்ரை பண்ணிப்பார்த்தோம் ஆனா அவ கேட்கிர மாதிரி இல்ல. எல்லா டொக்டர்மார்டயும் காட்டிப் பார்த்துட்டோம். ஆனா இவ திருந்துர மாதிரி இல்ல. நானும் இவரும் நிறைய நாள் தனிய அழுது இருக்கம். என்ன சொல்லியும் எவ்வளவு அழுதும் ஒரு கணக்கும் இல்ல. இனி பேசினா வீட்ட விட்டு போயிடுவன் என்டா. இவயால நாங்க பட்ட அவமானம் கொஞ்ச நஞ்சமில்ல. நாங்க என்ன டொக்டர் செய்ர, ஒரே பிள்ளை இப்டி ஆயிட்டு, இவ செத்தாலும் பரவாயில்ல” என கவலையுடன் கூறி முடித்தார். (ஒரு தாய் தனது பிள்ளை செத்தா நல்லம் என்று கூறியது எனக்கு ஆச்சரியமாகவம் புது அனுபவமாகவும் இருந்தாலும், எந்த அளவுக்கு அவர் பாதிக்கப்பட்டிருப்பார் என தெளிவாகக் காட்டியது) எனினும் தீவிர சிகிச்சைப்பிரிவில் (HDU) வைத்துப்பார்ப்பதாக கூறி அவர்களிடம் இருந்து விடை பெற்றேன்.

ஒரு மணித்தியாலயம் செல்லவில்லை எனது போன் ரிங் செய்தது. மீண்டும் ETU இல் இருந்து என்னை அவசரமாக வருமாறு அழைப்பு. நான் அங்கே போன போது அந்த யுவதியின் இதயம் தாறு மாறாக இயங்கு வதாகவும், ECG இல் Ventricular Tachycardியை இருப்பதாகவும் உடனடியாக கரண்ட் சொக் (Cardiac Defibrillation) கொடுக்கப்போவதாகவும் கூறி உடனடியாக வழங்கப்பட்டது

தொடரும்...

# பேசும் படங்கள்...!



- K.F.Sajana - Art Course -



- G.F.Rashna Dool - Art Course -